**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110247

1. District மாவட்டம் : கோவை PS: காவல்நிலையம் ஊ.த.பி. Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 09/2020/AC/CB Date: நாள் 08.11.2020

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended Sections பிரிவுகள்: 7(a) and 7(A)
(ii) Act சட்டம்: by the PC (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 07.11.2020 Date to : நாள் வரை 08.11.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1500 hrs Time to : நேரம் வரை 01.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.11.2020 Time நேரம் : 04.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL - I Time நேரம் : 04.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 km தென் மேற்கு,
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி எண் - 2, இணை சார்பதிவாளர் அலுவலகம், ராஜ வீதி, கோவை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. துரைசாமி
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் P. பழனியப்பன்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 48
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் ஆய்வுக் குழு அலுவலர் / துணை ஆட்சியர்
(g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கோயம்புத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. எஸ். கார்த்திகேயன், எண் 2, இணை சார்பதிவாளர் [மாவட்ட பதிவாளர் நிலை] எண் 2, இணை சார்பதிவாளர் அலுவலகம், ராஜவீதி, கோவை, 2) திரு. ந. தாமிரராஜன், த/பெ. நடராஜன், எச். எல். தெரு, செல்வபுரம், கோவை (ஆவண எழுத்தர் - ரமேஷின் அலுவலக பணியாளர்) 3) திரு. ரவீந்திரன், த/பெ. பாலன், ஆவண எழுத்தர், [illegible] 572, ராஜ வீதி, கோவை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 08/11/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 08/11/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08/11/2020

Name: பெயர் P. பரிமளாதேவி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
இ.தொ.க. பிரிவு, கோவை.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**Continuation of the FIR in Coimbatore V&AC Cr.No.09/2020/AC/CB u/s. 7(a) and 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.**

இன்று 08.11.2020-ம் தேதி 04.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.துரைசாமி, ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். Cr.No.09/2020/AC/CB, u/s. 7(a) and 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின் வருமாறு: அனுப்புநர் திரு.P.துரைசாமி, ஆய்வுகுழு அலுவலர்/ துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.582/2020/ஐ1 நாள் 08.11.2020, அம்மையீர், பொருள்- திடீர் தணிக்கை - கோவை மாவட்டம்- 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், ராஜவீதி, கோயம்புத்தூர் - திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் - மேல் நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர் மாநகரம், ராஜவீதியில் அமைந்துள்ள 2 எண் இணை சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைத் தரகர்களிடமிருந்தும், நேரடியாகவும் மறைமுகமாகவும் பெறப்படும் கையூட்டு பணத்தை அந்தந்த வார இறுதியில் இணை சார்பதிவாளர் அவரது சொந்த ஊரான மதுரைக்கு TN 59 BR 5200 என்ற பதிவெண் கொண்ட அவரது Honda City வாகனத்தில் செல்லும்போது, கோவை ராஜவீதியிலுள்ள திரு.ரமேஷ் என்ற ஆவண எழுத்தரின் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.காளிராஜன் மற்றும் ஆவண எழுத்தர்

திரு.ரவீந்திரன் ஆகியோர்கள் மூலமாக அந்தந்த வாரம் முழுவதும் பத்திரம் பதிவு செய்வதற்கு மாமூலாக பெறப்பட்ட பணத்தை பெற்றுச் செல்வதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் நானும், கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து 07.11.2020-ம் தேதி பிற்பகல் கோவை 2 எண் இணை சார்-பதிவாளர் அலுவலகம் அருகில் கண்காணிக்கப்பட்டது. அப்போது மதியம் சுமார் 14.00 மணியளவில் இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்கள் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து ராஜவீதியில் கிழக்குபுறமாக சுமார் 50 மீட்டர் நடந்து தென்புறம் வடக்குபார்த்து அமைந்திருந்த ஸ்ரீ வெங்கோ ஜூவெல்லர்ஸ் என்ற நிறுவனத்தின் வளாகத்தில் உள்ள வாகனம் நிறுத்தும் இடத்திற்கு சென்று அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி வாகனத்தின் அருகில் சென்றபோது அவருடன் அட்டை பெட்டிகளுடன் வந்த இரண்டு நபர்கள் இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்களின் காரில் அந்த இரண்டு பெட்டிகளையும் வைத்தார்கள். பின்னர் இணைசார்பதிவாளர் அவர்கள் அவரது வாகனத்தில் ஏறி வாகனத்தை இயக்கினார். அப்போது நான், கோவை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் திடீர் சோதனைக்கு வந்துள்ள விபரத்தை தெரிவித்து அறிமுகப்படுத்திக் கொண்டு அவரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் எஸ்.கார்த்திகேயன் என்றும் தான் கோவை மாநகரம், ராஜவீதியில் உள்ள எண் 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட பதிவாளர் நிலையில் இணை சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவருடைய சம்மதத்துடன் அவரையும் அவரது காரையும் சோதனை செய்யப்பட்டது. அப்போது அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க தன்னுடைய காரிலிருந்து ரூ.5,200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைபற்றி விசாரிக்க அதற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் ரூ.5,200/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.1,300/-ஐ எடுத்து ஆஜர் செய்தார், அதைபற்றி விசாரித்தபோது, அவர் 07.11.2020-ம் தேதி அலுவலகத்திற்கு ரூ.2,500/- கொண்டுவந்ததாகவும், அதனை அலுவலக தனிநபர் கையிருப்புப் பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும், அதில் ரூ.1,200/-ஐ செலவு செய்துவிட்டதாகவும் தெரிவித்து மீதம் ரூ.1,300/- உள்ளதாக கூறியதன் பேரில் அப்பணத்தை அவரிடமே திருப்பி

கொடுக்கப்பட்டது. மேலும் அவருடன் இருந்த இரு நபர்களில் ஒருவரை விசாரித்த போது அவர் தனது பெயர் திரு.சிவராமன் என்றும் அவர் ஆவண எழுத்தர் திரு.கேசவன் என்பவரிடம் உதவியாளராக பணிபுரிந்து வந்ததாகவும், தற்சமயம் சில ஆவண எழுத்தர்கள் சொல்வதற்கிணங்க வில்லங்க சான்று பெற்று தரும் வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் ஒவ்வொரு வாரமும் வார இறுதியில் வெள்ளி அல்லது சனிக்கிழமை நாளில் இணை சார்பதிவாளர் திரு.S.கார்த்திகேயன் அவர்கள் அவரது சொந்த ஊரான மதுரைக்கு செல்லும்போது ஆவண எழுத்தர்கள் திரு.ரமேஷ் மற்றும் திரு.ரவீந்திரன் அலுவலகத்திலிருந்து அந்தந்த வார ஆவணப்பதிவுக்காக தனியாக எங்களை போன்றவர்களிடமிருந்து வசூல் செய்யும் மாமூல் பணத்தை இணைசார்பதிவாளர் பெற்று செல்வதாகவும் கூறினார். அதேபோன்று இந்த வாரத்தில் ஆவணப்பதிவு செய்ததற்காக ரூ.3000/-ஐ ஆவண எழுத்தர் திரு.ரமேஷ் என்பவரிடம் உதவியாளராக பணிபுரியும் திரு.காளிராஜன் என்பவரிடம் கொடுத்ததாக கூறினார். மேலும் அங்கிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ராமசந்திரன் என்றும் தான் ஆவண எழுத்தர், திரு.ரவீந்திரன் என்பவரது அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், 07.11.2020-ம் தேதி இணைசார்பதிவாளர் கேட்டுக்கொண்டதின் பேரில் திரு.சிவராமன் என்பவரின் உதவியுடன் எண்-2 இணை சார்பதிவாளரின் காரில் பட்டாசு பாக்ஸ் மற்றும் ஸ்வீட் பாக்ஸ் ஆகியவற்றை வைத்ததாகவும் கூறினார். மேலும் இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்களை விசாரித்தபோது, தான் ஒவ்வொரு வாரமும் வார இறுதியில் வெள்ளி அல்லது சனிக்கிழமை நாளில் தனது சொந்த ஊரான மதுரைக்கு தனது காரில் சென்றுவருவதாகவும், அப்போது ஆவண எழுத்தர் ரமேஷ் மற்றும் ரவீந்திரன் அலுவலகத்திலிருந்து அந்தந்த வார ஆவணப்பதிவுக்காக தனியாக வசூல் ஆகும் மாமூல் பணத்தை பெற்று செல்வதாகவும், அதன்படி 07.11.2020 ஆம் தேதி மதியம் 14.00 மணிக்கு தனது அலுவலகத்திலிருந்து வெளியே சென்று காரை எடுத்துச்சென்று தனது அலுவலகத்திற்கு அருகில் உள்ள திரு.ரமேஷ் என்பவரின் அலுவலகத்தில் உள்ள உதவியாளர் திரு.காளிராஜன் மற்றும் ஆவண எழுத்தர் ரவீந்திரன் ஆகியோர்களிடமிருந்து இந்த வாரம் முழுவதும் வசூல் செய்த மாமூல் பணத்தை பெற்றுச்செல்ல இருந்தாகவும் தெரிவித்தார். மேலும் அவரை விசாரித்தபோது அவரை திரு.ரமேஷ் மற்றும் திரு.ரவீந்திரன் ஆகிய ஆவண எழுத்தர்களின்

அலுவலகங்களுக்கு அழைத்து சென்றால் இந்த வாரம் முழுவதும் வசூல் செய்த மாமூல் பணத்தை அவர்களிடமிருந்து பெற்று ஆஜர் செய்வதாக கூறினார். அதன்பேரில் ராஜவீதியில் இணைசார்பதிவாளர் அலுவலகத்தின் அருகில் கிழபுறம் அமைந்துள்ள ஆர்.கே.ஹவுஸ் என்ற கட்டிடத்தில் தரைத்தளத்தில், கதவு எண்.591 என்ற முகவரியில் உள்ள ஆவண எழுத்தர் திரு.ரமேஷ் என்பவரின் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கே இருந்த திரு.ந.காளிராஜன் என்பவரிடம், இணை சார்பதிவாளர் தனக்கு வாரகடைசியில் மாமூலாக கொடுக்கும் பணத்தை பற்றி கேட்டபோது அவர் அவரது அறையிலிருந்த கணினி மேஜையின் டிராயலிருந்து குறிப்புகள் அடங்கிய வெள்ளை பேப்பரில் சுற்றிவைக்கப்பட்ட பணத்தினை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,65,600/-இருந்தது. மேற்படி குறிப்புகள் அடங்கிய பேப்பரில் 1) சிவராமன் 2) சாந்தி, 3) சுகுமார், 4) புவனேந்தன், 5) ரவீந்திரன், 6) சர்தார், 7) லீலாகிருஷ்ணன், 8) கார்த்திக் ஆகிய பெயர்களும் 10000, 51500, 6600, 50000, 47500 என்றும் அதன் கூட்டலாக 165600 என்றும் எழுதப்பட்டிருந்தது. அதைபற்றி அவரிடம் விசாரிக்க, இணை சார்பதிவாளர் ஒவ்வொரு வாரமும் மேற்படி ஆவண எழுத்தர்கள் மற்றும் ஆவணப்பதிவிற்கு வரும் இடைத்தரகர்களிடம் மாமூலாக கேட்ட பணத்தை தன்னிடம் கொடுக்க சொல்லி அனுப்பி வைத்ததாகவும் அவ்வாறே மேற்படி நபர்கள் இந்தவாரத்தில் மாமூலாக தன்னிடம் கொடுத்த பணத்தை ஒன்றாக சேர்த்து இணைசார்பதிவாளர் கேட்டுக்கொண்டதின்பேரில் 07.11.2020 ஆம் தேதி மதியம் அவரிடம் கொடுக்க இருந்ததாகவும் ஆனால் தற்போது இணை சார்பதிவாளர் அவர்கள் தங்கள் முன்னிலையில் நேரில் வந்து கேட்டதின்பேரில் மேற்படி மாமூல் பணத்தை ஆஜர் செய்ததாகவும் தெரிவித்தார். ஆதலால் மேற்படி மாமூல் பணம் ரூ.1,65,600/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து வேறு ஏதேனும் பணம் உங்களுக்கு வரவேண்டியுள்ளதா என்று இணைசார்பதிவாளரிடம் விசாரித்தபோது மேற்படி கட்டிடத்தின் முதல் மாடியில் உள்ள ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் என்பவர் இந்தவாரம் தனக்கு மாமூலாக பணம் கொடுப்பார் என்று சொன்னதின்பேரில் முதல் மாடியிலிருந்த ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது அந்த அலுவலகத்தில் திரு.ரவீந்திரன் ஆஜரில் இல்லை. ஆனால் உதவியாளர் திரு.கார்த்திகேயன் மற்றும் பணியாளர்கள் இருந்தார்கள். அப்போது திரு.கார்த்திகேயனிடம் ரூ.16,770/-இருந்தது. அந்த பணம் அவரது சொந்தபணம்

என்றும் அவரது மாத ஊதியம் என்றும் சொன்னதால் அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் என்பவரை பற்றி விசாரிக்க அவர் அப்போதுதான் வெளியே சென்றதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து எண்-2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் திரு.எஸ்.கார்த்திகேயன், இணை சார்பதிவாளர், மேற்படி திரு.காளிராஜன் மற்றும் தணிக்கை குழுவுடன் வந்து அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பணியாளர்கள் அனைவரையும் விசாரித்து சோதனை செய்ததில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. திடீர் சோதனை நடவடிக்கையின் போது இரவு சுமார் 08.15 மணியளவில் ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் என்பவர் தானாக எண் 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை குழுவினர் முன்னிலையில் ஆஜராகி, தான் ராஜவீதியில் எண் 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தின் அருகில் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள ஆவண எழுத்தர் அலுவலகம் வைத்து நடத்திவருவதாகவும், கடந்த சுமார் ஒரு வருடமாக இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் ஆவணங்களுக்கு எண் 2 இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில், ஆவணம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் பதிவுக்கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அல்லாமல் அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாக பணம் பெற்று எண்-2 இணைசார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் என்பவருக்கு ஒவ்வொரு ஆவணங்களுக்கும், ஆவணங்களின் மதிப்பிற்கு ஏற்றாற்போல் குறைந்தபட்சம் பணம் ரூ.1500/- முதல் கொடுத்து வருவதாக தெரிவித்தார். அவ்வாறாக கடந்த 04.11.2020 முதல் 07.11.2020 வரை பதிவு செய்யப்பட்ட 46 ஆவணங்களுக்கான மாமூல் தொகையை இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்களுக்கு கொடுப்பதற்காக தனது அலுவலகத்தில் வைத்திருப்பதாகவும், தன்னுடன் வந்தால் மேற்படி பணத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அதன்பேரில் தணிக்கை குழுவினர், இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் மற்றும் ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் ஆகியோருடன் ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் என்பவரது அலுவலகத்திற்கு சென்ற போது அவரது அலுவலகத்தில் பொதுமக்களின் ஆவணங்களை பதிவு செய்ய கூடுதலாக பெற்ற மாமூல் தொகையை அவரது அலுவலகத்தில் இருந்த மேஜை ட்ராயரிலிருந்து எடுத்து எண்ணி பார்த்து தொகை ரூ.1,16,500/-ஐ ஆஜர் செய்தார். அந்த தொகையை விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டது. மேலும் அதே மேஜை ட்ராயரிலிருந்த மற்ற தொகையைப் பற்றி விசாரிக்க அதில் ரூ.2,50,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை பற்றி விசாரிக்க வரும் வாரத்தில் கெம்பட்டி காலனியை சேர்ந்த திருமதி.விஜயலட்சுமி என்பவரது ஆவணப்பதிவிற்கு பதிவு கட்டணம் மற்றும் முத்திரை தீர்வை செலுத்த ரூ.2,00,000/-ம் மற்றும் குனியமுத்தூரை சேர்ந்த திரு.அபு என்பவரது ஆவணப்பதிவிற்கு பதிவு கட்டணம் மற்றும் முத்திரை தீர்வை செலுத்த ரூ.50,000/-ம் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அது குறித்து விசாரணை செய்து, அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் தணிக்கை குழுவினர் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் அவரது அலுவலகத்தின் மூலமாக எண்-2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் விபரங்கள் அடங்கிய பதிவேட்டின் 04.11.2020 முதல் 07.11.2020 வரையிலான (பக்கம் 242 முதல் 247 வரை) ஒளிநகல் எடுத்து அதில் திரு.ரவீந்திரன் தனது கையொப்பமிட்டு அளித்தார். அதனை தொடர்ந்து இணை சார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன், ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் மற்றும் ஆய்வுக்குழுவினருடன் எண்-2 இணை சார்பதிவாளர் அலுவலகம் வந்து கீழ்கண்ட ஆவணங்கள் 1) அசல் அலுவலக வருகை பதிவேடு நாள் 01.01.2020 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது (பக்கம் 1 முதல் 31 வரை), 2) அலுவலகத்திலிருந்த தனி நபர் பணம் இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 140 வரை), 3) கைரேகைப்பதிவேடு தொகுதி எண்.587/2020 (பக்கம் 1 முதல் 100 வரை), 4) 02.11.2020 முதல் 07.11.2020 பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரப்பட்டியலில் இணைசார்பதிவாளர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி நடவடிக்கையின் போது திரு.எஸ்.கார்த்திகேயன், எண்-2 இணை சார்பதிவாளர், தனிநபர் திரு.என்.காளிராஜன் மற்றும் ஆவண எழுத்தர் திரு.ரவீந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது பணம் ரூ.2,87,300/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை சம்மந்தமாக நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டது. இத்துடன் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,87,300/-, ஆவணங்கள் மற்றும் வாக்கு மூலங்கள் ஆகியவற்றை இணைத்து மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். எனவே மேற்படி நடவடிக்கைகளில் தொடர்புடையதாக தெரியவரும் திரு.எஸ்.கார்த்திகேயன், எண் 2

துணை சார்பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), எண் 2 இணை சார்பதிவாளர் அலுவலகம், ராஜ வீதி, கோவை, 2) திரு.ந.காளிராஜன், த/பெ.நடராஜன், (ஆவண எழுத்தர் திரு.ரமேஷ் என்பவரின் அலுவலக பணியாளர்) மற்றும் திரு.ரவீந்திரன், த/பெ.பாலன், ஆவண எழுத்தர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sdxxxxx) 08.11.2020 ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், கோயம்புத்தூர். இணைப்பு:- 1) திடீர் சோதனை நடவடிக்கை குறிப்புகள் 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,87,300/- 3) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் 4) பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் 5) குறிப்புச்சீட்டு. Madam, Received the complaint along with proceedings, Cash Rs.2,87,300/-, Documents, Statements, bit of paper on 08.11.2020 at 04.00hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.09/2020/AC/CB u/s. 7(a) and 7(A) of PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 08.11.2020 at 05.00 hrs. (Sdxxxxx) P.Parimaladevi, 08.11.2020 Inspr, V&AC, Coimbatore. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

08/11/2020

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.